இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

**********************************************************************

முன்னிலை : திரு. செ. மதுக்குமார்,
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்.

இடம் : இராமநாதபுரம்.

செயல்முறை ஆணை எண்:அ1/2797/2019, நாள்: 18.11.2019

பொருள் : பணியமைப்பு - வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை - வேலைவாய்ப்பு பிரிவு - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக நேரடி நியமனம் தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் தொகுதி IV பணிகள் 2015-2016-ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட தட்டச்சர் பணியினை வரன்முறை செய்தல் - திரு.கு.சக்திவேல் தட்டச்சர், இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் - பணி வரன்முறை செய்து தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக.

பார்வை :

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண்.5662/PSD-A2/2017 நாள்: 03.10.2017.
2. சென்னை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அவர்களின் செயல்முறை ஆணை எண்.நிர்2/21685/2017 நாள்: 12.10.2017
3. இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ1/3645/2017, நாள்: 16.10.2017
4. சென்னை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, இயக்ககக் குறிப்பாணை எண்.நிர்2/2056/2019, நாள்: 04.11.2019.

*****

**ஆணை:**

பார்வை (1)-ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடிதத்தில் நேரடி நியமனம் மூலம் 2015-2016-ஆம் ஆண்டிற்கான தொகுதி IV-ல் அடங்கிய தட்டச்சர் பட்டியல் பெறப்பட்டு, பார்வை (2)-ல் காணும் இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அவர்களின் செயல்முறை ஆணையின்படி அப்பட்டியலில் வரிசை எண்.7-ல் குறிப்பிடப்பட்ட திரு.கு.சக்திவேல் என்ற தெரிவுதாரர் இராமநாதபுரம் மவாட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் காலியாக உள்ள தட்டச்சர் பணியிடத்தில் தற்காலிக நியமனம் செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணைகள் வழங்கப்பட்டது.

த.பி.பா...

அதனடிப்படையில் பார்வை (3)-ல் காணும் இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக உதவி இயக்குநர் அவர்களது செயல்முறை ஆணையின்படி தற்காலிக பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து திரு.கு.சக்திவேல் இவ்வலுவலகத்தில் 19.10.2017 முற்பகல் தற்காலிக தட்டச்சர் பதவியில் பணியில் சேர்ந்தார்.

பார்வை (1)-ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதம் மூலம் தட்டசர் தொகுதி IV-ல் தற்காலிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தட்டச்சர்களுக்கு பார்வை (4)-ல் காணும் இயக்ககக் குறிப்பாணையில் தட்டச்சர் பதவியை பொறுத்த வரையில் தெரிவுதாரர்கள் பணியில் சேர்ந்து ஓராண்டு நிறைவுற்ற பின்னர் நியமன அலுவலர் அளவிலேயே பணி வரன்முறை செய்து ஆணைகள் வெளியிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடிதத்தின் வழி பணிமூப்பு நிர்ணயம் செய்தும் பெறப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து இவ்வலுவலகத்தில் தற்காலிக நிலையில் தட்டச்சராக பணிபுரிந்து வரும் திரு.கு.சக்திவேல் அவர்களது தற்காலிக பணியினை அவர் இவ்வலுவலகத்தில் பணியில் சேர்ந்த நாளான 19.10.2017 முற்பகல் முதல் தட்டச்சர் பதவியில் பணி வரன்முறை செய்து இதன் மூலம் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மேற்குறித்தவாறு இப்பணியாளரது தற்காலிக பணி, அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்யப்படுவதால் அவர் தட்டச்சர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 19.10.2017-லிருந்து தொடர்ச்சியான மூன்று ஆண்டுகளுக்குள் இரண்டு ஆண்டு காலத்திற்கு (He is placed under probation for two years, in the continuous period of three years) தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

இவரது பணி வரன்முறை சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நியமனம் தொடர்பான ரிட் மனுக்கள் மீது பிறப்பிக்கப்படவுள்ள இறுதி ஆணைகளுக்கு கட்டுப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்செயல்முறை ஆணையினை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையை உடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,
இராமநாதபுரம்.

18.11.19

<u>பெறுநர்:</u>

திரு.கு.சக்திவேல்
தட்டச்சர்,
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
இராமநாதபுரம்.

<u>நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u>

1. இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி, சென்னை - 32.
2. மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), கோ.புதூர், மதுரை - 7.
3. இருப்புக் கோப்பு.
4. பணிப்பதிவேடு.